III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.441/2019

Deposition of witness for the Defendant / DW1
solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 09-03-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : கீதா | Village | : |
| Father's / Husband's Name | : அருள்ஜோதி | Calling | : |
| Age | : | Taluk | : |

**<u>குறுக்கு விசாரணை</u>**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

வாதி என்ன பரிகாரம் கேட்டு எனக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்றார் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் M.A, வரலாறு படித்திருக்கின்றேன். என்னுடைய கணவர் M.A.M.Ed., படித்திருக்கின்றார். NGO வைத்து நடத்தி வருகின்றார். என்னுடைய கணவர் 20.04.2019 ல் இறந்துவிட்டார். வாதி ரவிசந்திரன் குடும்பமும் என்னுடைய குடும்பமும் 25 ஆண்டுகளாக பழக்கம். 2000 ஆண்டிலிருந்தே பழக்கம். வாதிக்கு 2 ஆண்பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்கள் இருவருக்கும் திருமணம் ஆன விவரம் தெரியுமா என்றால் நான் அங்கு இல்லை 2019 லேயே கிளம்பிவிட்டேன். தற்போது நான் குடியிருக்கின்ற வீடு என்னுடைய கணவர் பெயரில் இருக்கின்றது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பெயரில் இருக்கின்றது. என்னுடைய மகள் 2 ஆம் பிரதிவாதி பள்ளி படிப்பை எப்பொழுது முடித்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அவர் 2014 லில் அமெரிக்காவிற்கு சென்றார். என்னுடைய மகள் படிக்க 34 லட்சம் செலவானது. அதனை வங்கியில் கடன் பெற்று செலவழித்தேன். 17.08.2015 ல் நான் வாதி வீட்டிற்கு சென்று பணம் கேட்க எனது கணவருடன் சென்றேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கின்ற நிரூபண வாக்குமூலத்தை நன்றாக படித்துப் பார்த்து தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த பிரமாண வாக்குமூலம் பத்தி 18 ல் 2015 ஆம் ஆண்டு என்னுடைய கணவர் வாதியிடம் பணம் பெற்றதாக சொல்லியிருக்கிறேன் என்றால் என்னுடைய கணவர் 7 லட்சம் மட்டும் கடன் வாங்கியிருந்தார் அது எனக்கு 2019 ல் தான் தெரியும். 08.12.2018 தேதியிட்ட கடனுறுதிச் சீட்டு மூலமாக நான் வாதியிடம் ரூ.2,50,000/-கடனாக

பெற்றிருக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. 12.12.2015 அன்று நான் வாதிக்கு கடனுறுதிச் சீட்டு இயற்றிக்கொடுத்து ரூ.3 லட்சம் கடனாக பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகள் 2 ஆம் பிரதிவாதி வாதிக்கு மாதம் மாதம் வட்டித் தொகை கொடுத்திருக்கின்றார் என்று சொன்னால் அந்த வங்கி கணக்கு joint வங்கி கணக்கு அதனை என்னுடைய கணவரும் மகளும் சேர்ந்து இயக்கினார்கள். அந்த வழியில் என்னுடைய கணவர் அனுப்பிய தொகைகள் தான் அவை. இந்த தொகை அனுப்பப்பட்டது உண்மைதான். ஆனால் அது வட்டித் தொகையா என்னவென்று எனக்கு தெரியாது. என்னுடைய மகளை வாதியின் 3 வது மகனுக்கு திருமணம் செய்து கொடுப்பதாக நான் சொல்லியிருந்தேன் என்றால் அது எனக்கு தெரியாது. என்னுடைய வீட்டுக்காரருக்கு தான் தெரியும். நான் தாக்கல் செய்திருக்கின்ற எதிர்வழக்குரையிலேயோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலேயோ வாதியிடம் இருந்து பணம் வாங்கவில்லை என்று குறிப்பிட்டு மறுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் பணம் வாங்கியதை குறிப்பிட்டு மறுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி என்னிடம் பலமுறை சுமூகமாக பணம் கேட்டார் என்றால் அப்படி கேட்கவில்லை. ஒரு முறைகூட கேட்கவில்லை. straight ஆக நோட்டிஸ் தான் வந்தது. வாதி என்னிடம் பலமுறை பணம் கேட்டு நான் மறுத்ததால் தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. ஒரு முறை கூட என்னிடம் பணம் கேட்கவில்லை. வாதி பணத்தை திரும்ப கேட்டு என்னை மிரட்டவில்லை. அவர் என்னுடைய மகளை அவரது மகனுக்கு திருமணம் செய்து வைக்க என்னிடம் எதுவும் கேட்கவில்லை என்னுடைய கணவரிடம் தான் பேசியிருக்கின்றார். நான் வாதிக்கு பணத்தை திரும்ப செலுத்தி வைத்ததாக எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வங்கி கணக்கு விவரங்களை தாக்கல் செய்திருக்கின்றேன். Axis Bank விவரங்களை தாக்கல் செய்திருக்கின்றேன். நான் வாதிக்கு பணத்தை திரும்பி செலுத்தியதாக எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யாததால் வாதி கோரியுள்ளபடி அவருக்கு பணத்தொகையை திரும்ப செலுத்தி வைக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியுள்ளபடி அவர் பரிகாரத்தை பெறத்தக்கவர் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**